பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

21 03 2026 SATURDAY 6.45 AM

## வணக்கம் - மாநில செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

- நாட்டில் உள்ள அனைத்து எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும் போதுமான கச்சா எண்ணெய் கையிருப்புடன், முழுத் திறனுடன் இயங்கி வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் குற்றவழக்கு தொடர்பான விவரங்களை ஊடகங்களில் விளம்பரம் செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

- ஆலங்கட்டி மழை மற்றும் சூறைக்காற்று காரணமாக, மாநிலத்தில் 8 மாவட்டங்களில், 850 ஹெக்டேரில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

- நாடு முழுவதும் புனித ரமலான் பண்டிகை இன்று வழக்கமான உற்சாகத்துடனும், கொண்டாடப்படுகிறது.

- Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் Tanvi Sharma இன்று ஜப்பானின் Nozomi Okuhara-வை எதிர்கொள்கிறார்.

>>>>>>>><<<<<<<<

நாட்டில் உள்ள அனைத்து எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும் போதுமான கச்சா எண்ணெய் கையிருப்புடன், முழுத் திறனுடன் இயங்கி வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், உள்நாட்டில் திரவ எரிவாயு உற்பத்தி சுமார் 40 சதவீதம் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு குறித்து எந்தப் புகாரும் வரவில்லை என்றும், பொதுமக்கள் அச்சமடைந்து பொருட்களை வாங்க வேண்டாம் என்றும் அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும், பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தையைத் தடுக்க நாடு முழுவதும் சோதனைகள் நடத்தப்பட்டு, கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கை எரிவாயு துறையைப் பொறுத்தவரை, வீடுகள் மற்றும் போக்குவரத்துத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு விநியோகம் சீராகப் பராமரிக்கப்படுகிறது.

அதே நேரத்தில், தொழிற்சாலைகளுக்கான பயன்பாடு முறைப்படுத்தப்பட்டுள்ளது.

எல்பிஜி மீதானச் சார்பைக் குறைக்க, நகர எரிவாயு விநியோக நிறுவனங்கள் பிஎன்ஜி இணைப்புகளை ஊக்குவித்து வருகின்றன.

>>>>>>>><<<<<<<<

உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் மீது நிலுவையில் உள்ள அல்லது தண்டனை வழங்கப்பட்ட குற்ற வழக்குகள் குறித்த விவரங்களைச் செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் கட்டாயம் விளம்பரப்படுத்த வேண்டும் எனத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதற்காகத் தேர்தல் ஆணையம் பிரத்யேகப் படிவங்களை வரையறுத்துள்ளது. இதன்படி, வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்ட 48 மணி நேரத்திற்குள் அல்லது வேட்புமனு தாக்கல் செய்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக, இவற்றில் எது முதலாவதாக வருகிறதோ, அந்தத் தேதியில் விவரங்களைச் செய்தித்தாள்கள், சமூக ஊடகங்கள் மற்றும் கட்சியின் இணையதளங்களில் வெளியிட வேண்டும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

வேட்புமனுவைத் திரும்பப் பெறுவதற்கான கடைசித் தேதிக்கு மறுநாள் தொடங்கி, வாக்குப்பதிவு முடிவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக மூன்று முறை வெவ்வேறு நாட்களில் இந்த விளம்பரங்களை வெளியிட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த விதிமுறைகள் வேட்பாளர்களுக்கு மட்டுமின்றி, அவர்களைச் சார்ந்த அரசியல் கட்சிகளுக்கும் பொருந்தும் என்றும் திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளுக்கு இடையேயான தொகுதி பங்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் திரு. ரங்கசாமி தலைமையிலான NR காங்கிரஸ் 16 இடங்களிலும். பிஜேபி 10 இடங்களிலும், அஇஅதிமுக மற்றும் லட்சிய ஜனநாயக கட்சி தலா 2 தொகுதிகளிலும் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு NR காங்கிரஸ் தலைமை வகிப்பதாகவும், அக்கட்சியின் தலைமையில் தேர்தலை சந்திப்பதாகவும் புதுச்சேரிக்கான பிஜேபி மேலிடப் பொறுப்பாளர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, புதுச்சேரியில் வேட்புமனு தாக்கல் செய்ய நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

தொகுதி பங்கீடு உறுதி செய்யப்படாத நிலையிலும், திமுக மற்றும் காங்கிரஸ் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் தங்களுக்கு வெற்றி வாய்ப்பு என்றும் கருதும் தொகுதிகளில் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன.

>>>>>>>><<<<<<<<

திமுக தலைமையிலான கூட்டணியில் தொகுதிப் பங்கீடு தொடர்பாக மக்கள் நீதி மய்யம் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தி வருவதாக அக்கட்சியின் தலைவர் திரு. கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர். தொகுதிகளின் எண்ணிக்கை என்பது இலக்கு அல்ல என்றும், அணியின் வெற்றி தான் முக்கியம் என்று கூறினார்.

>>>>>>>><<<<<<<<

ஆலங்கட்டி மழை மற்றும் சூறைக்காற்று காரணமாக, மாநிலத்தில் 8 மாவட்டங்களில், 850 ஹெக்டேரில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு திடீரென பெய்த ஆலங்கட்டி மழையினால், மதுரை, சேலம், தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில், சாகுபடி செய்யப்பட்டிருந்த நெல், எண்ணெய்வித்துகள், சிறுதானியங்கள், பருத்தி மற்றும் கரும்பு ஆகிய வேளாண் பயிர்கள் சேதமடைந்தன.

குறிப்பாக, அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதேபோல், கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் வீசிய சூறைக்காற்றுடன் கூடிய மழையினால், சுமார் 40 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த வாழை, சின்ன வெங்காயம், முருங்கை, தென்னை மற்றும் மலர் செடிகள் உள்ளிட்ட தோட்டக்கலைப் பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

நாடு முழுவதும் புனித ரமலான் பண்டிகை இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

முப்பது நாட்கள் நோன்பிருந்து, இறைவனைத் தொழுது, ஏழை எளியவர்களுக்கு தான-தர்மங்கள் வழங்கி, இந்நாளை இஸ்லாமியர்கள் கொண்டாடி வருகின்றனர்.

இந்நாளை முன்னிட்டு, சென்னை தீவுத்திடல், திருவல்லிக்கேணி பெரிய மசூதி மற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களில் இன்று காலை சிறப்புத் தொழுகைகள் நடைபெற்று வருகின்றன.

இதில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு, உலக அமைதிக்காகவும், சகோதரத்துவத்திற்காகவும் தொழுகை செய்தனர்.

தொழுகைக்குப் பின், ஒருவருக்கொருவர் கட்டித்தழுவி ரம்ஜான் வாழ்த்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

>>>>>>>><<<<<<<<

உலக Downsyndrom தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

கருவில் உள்ள சிசு வளரும் போதே, குரோமோசோம் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றத்தால், Downsyndrome என்ற மரபணு ரீதியிலான பாதிப்பு ஏற்படுகிறது.

இயன்முறை மருத்துவம் மூலம் இந்த பாதிப்புகளை குறைக்க முடியும் என்று மருத்துவர் புண்ணியகோடி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – புண்ணியகோடி 59 செகண்ட்ஸ்)

>>>>>>>><<<<<<<<

சென்னை பூந்தமல்லியிலிருந்து கலங்கரை விளக்கம் வரை அமைக்கப்பட்டு வரும் மெட்ரோ ரயில் வழித்தடத்தில், பூந்தமல்லி-நசரெத்பேட்டை இடையே பாலத்தின் உறுதித்தன்மை குறித்து கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் ஆய்வு செய்து வருகிறது.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அந்த மையத்தின் இயக்குநர் திருமதி. ஆனந்தவல்லி, ரயில்வே பாதுகாப்பு ஆணையம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் இந்த ஆய்வு தொடங்கியுள்ளதாக கூறினார்.

>>>>>>>><<<<<<<<

இருவரிச் செய்திகள்

குவைத், சவுதி அரேபியா நாடுகளில் பல்வேறு இலக்குகளை குறிவைத்து ஏவுகணைகளை கொண்டு தாக்குதல் நடத்தியதாக ஈரான் அறிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

தெற்கு சிரியாவில் உள்ள ராணுவத் தளங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதற்கு கத்தார் கண்டனம் தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

சத்திஷ்கட் மாவட்டத்தில் 2024ஆம் ஆண்டு மத்திய ரிசர்வ் காவல்படை முகாம் மீது, நக்ஸலைட்டுகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக, தேசிய புலனாய்வு முகமை புதிய குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சார்பில், ஏலகிரியில் போஸ்கோ சட்டம் குறித்து கல்லூரி மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடத்தப்பட்டது.

>>>>>>>><<<<<<<<

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டில் வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு சிலிண்டர்களை, வணிக நோக்கத்திற்கு பயன்படுத்தியவர்கள் மீது உணவுத்துறை அதிகாரிகள் அபராதம் விதித்தனர்.

>>>>>>>><<<<<<<<

திருப்பூர் மாவட்டத்தில் வாக்குப்பதிவு மையங்களில் உள்ள அடிப்படை வசதிகளை மாவட்ட தேர்தல் அலுவர் திரு. மனிஷ் நரவானே நேற்று ஆய்வு செய்தார்.

>>>>>>>><<<<<<<<

தூத்துக்குடியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட வாகன சோதனையின் போது, வாகனங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 21 லட்சம் ரூபாயை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

>>>>>>>><<<<<<<<

சென்னையில் 85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தபால் வாக்கு அளிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் வீடு வீடாக சென்று வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் Tanvi Sharma இன்று முன்னாள் உலக சாம்பியனான ஜப்பானின் Nozomi Okuhara-வை எதிர்கொள்கிறார்.

மற்றொரு அரையிறுதியில் இந்தியாவின் Isharani Baruah, தாய்லாந்தின் Pitchamon Opatniputh-ஐ எதிர்த்து விளையாடுகிறார்.

>>>>>>>><<<<<<<<